"பால் கறக்கும் பசுக்களுக்கு சரிவிகித உணவு அளிப்பது அவசியம்'

First Published : 12 Feb 2011 11:24:04 AM IST

திருப்பூர், பிப். 11: பால் கறக்கும் பசுக்களுக்கு சரிவிகித உணவு அளிப்பது அவசியம் என்று கால்நடை பராமரிப்புத்துறை அறிவுறுத்தியுள்ளது.

பால் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சார் பில் பால் உற்பத்தி நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இப்போராட்டத்தின் போது பால் உற்பத்தியைக் குறைக்கும் வகையில் கறவை மாடுகளுக்கு வழங்கும் கலப்புத் தீவனம் மற்றும் அடர் தீவன அளவுகளைக் குறைத்து வழங்கவும், மீதியுள்ள பாலை கன்றுகளுக்குத் தரும்படியும் போராட்டக்குழுவினர் அறிவுறுத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளன.

போராட்டக்குழுவினரின் அறிவுறுத்தலின்படி தீவனம் குறைவதால் பசுவுக்கு ஏற்பாடும் பாதிப்பு குறித்து கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் விடுத்துள்ள அறிக்கை:

தீவனம் குறைவதால் பால் உற்பத்தி குறைவதுடன் நீண்டகாலத் தீமையாக பசுவின் சினைபடும் சதம் குறையும்.

தவிர, கன்று ஈனும் இடைவெளி அதிகரிப்பதுடன் நோய் எதிர்ப்பு சக்தியும் குறையும். இதைத்தடுக்க பால் கறக்கும் மாடுகளுக்கு சரிவிகித தீவனம் வழங்க வேண்டும். பசுவின் பால் உற்பத்தித்திறனைப் பொருத்தும், அதன் உடல் எடையைப் பொருத்தும் கறவை பசுக்களுக்கு பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர் தீவனம் ஆகியவை சரிவிகிதமாக கொடுக்க வேண்டும்.

அடர் தீவனம் வழங்குவதால் பால் உற்பத்தி அதிகரிப்பதுடன், மாட்டுக்குத் தேவையான புரதச்சத்து மற்றும் கொழுப்புச்சத்து ஆகியன கிடைக்கும். தவிர, தீவனம் குறைத்து வழங்குவதால் ஏற்படும் பொருளாதார இழப்பு பெரிய அளவில் இருக்கும். எனவே, கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர் தீவனம் ஆகியவற்றை சரிவிகிதமாக அளிக்க வேண்டும்.

தேயிலை விவசாயிகளுக்கு அரசு மானியம் நிரந்தரத் தீர்வளிக்காது: ஆணையர் அர்மந்தர் சிங்

First Published : 11 Feb 2011 12:13:10 PM IST

மஞ்சூர், பிப். 10: தேயிலை விவசாயிகளின் பிரச்னைக்கு, அரசு அளிக்கும் மானியத்தால் நிரந்தரத் தீர்வு கிடைக்காது என தொழில் வணிகத் துறை ஆணையர் அர்மந்தர் சிங் கூறினார்.

மஞ்சூர் அருகே உள்ள பிக்கட்டி கூட்டுறவு தேயிலை ஆலையில் புதிதாக அமை க்கப்பட்டுள்ள மின்னணு எடை மேடையைத் திறந்து வைத்த அவர், பின்னர் தேயிலை விவசாயிகளுடன் நடைபெற்ற கலந்தரையாடல் கூட்டத்தில் பங்கேற்றார்.

பசுந்தேயிலைக்கு உரிய விலை வழங்குதல், தனியார் ஆலைகளுக்கு இணையாக விலை வழங்குதல், உரிய விலை கிடைக்கும் வரை அரசு மானியம் வழங்குதல், பாதுகாப்புத் துறைக்கு நீலகிரி தேயிலையை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தல் ஆகிய கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தினர்.

பின்னர், தொழில் வணிகத் துறை ஆணையர் அர்மந்தர் சிங் பேசியது:

தேயிலை விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்க்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பாதுகாப்புத் துறைக்கு நீலகிரி தேயிலை விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆனால், அஸ்ஸ0ம் தேயிலை வரத்தால் நீலகிரி தேயிலையைக் கொள்முதல் செய்வதில் பாதுகாப்புத் துறை தயக்கம் காட்டுகிறது. அதை விவசாயிகள் உணர்ந்து, பசுந்தேயிலை உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் தேயிலை சந்தையில் நீலகிரி தேயிலையின் இடத்தை தக்க வைக்க முடியும்.

அரசு வழங்கும் மானியம் மட்டுமே தேயிலைப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்காது.

தேயிலை சந்தையில் ஏற்படும் ஏற்ற, இறக்கங்களால் பசுந்தேயிலைக்கு நிரந்தர விலை நிர்ணயம் என்பது தற்போதைக்கு சாத்தியம் இல்லை.

எனவே, விவசாயிகள், ஆலைத் ஊழியர்கள், தொழிலாளர் என அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் தேயிலை சந்தையில் தனியாருக்கு இணையாக கூட்டுறவு ஆலைகளும் போட்டிய முடியும் என்றார்.

தினமலர்

**சூரியகாந்தியை பாதுகாக்கும் முறை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,01:05 IST

மதுரை:சூரியகாந்தியை இலை வண்டுகள், புழுக்கள், தத்துப்பூச்சிகள் மற்றும் பூக்கும் பருவத்தில் பச்சைப் புழுக்களில் இருந்தும் பாதுகாக்க வேண்டியுள்ளது.கூடுமானவரை சூரியகாந்தியில் மகரந்த சேர்க்கைக்கு துணைபுரியும் தேனீக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாற, பூச்சி மருந்துகளை

உபயோகிக்காமல் இருப்பது நல்லது. முடிந்தவரை இப்பூச்சிகளை கையால் பொறுக்கி அழிக்கலாம். இனக்கவர்ச்சி பொறியை ஏக்கருக்கு ஐந்து வீதம் அமைத்து, அந்துப்பூச்சியை கண்காணிக்கவும், அழிக்கவும் முடியும். அவசியம் ஏற்பட்டால் ஏக்கருக்கு 10 கிலோ, என்டோசல்பான் (4 சதவீதம்) அல்லது பாசலோன் (4 சதவீதம்) தூளையோ, மாற்றாக என்டோசல்பான் 400 மி.லி., பாசலோன் 250 மி.லி., அல்லது பென்தியான் 100 மி.லி., மருந்தை மாலை வேளையில் தெளிக்கலாம், என நீர்மேலாண்மை துணைஇயக்குனர் எஸ்.ஐ.காதிரி தெரிவித்துள்ளார்.

**பால் உற்பத்தியை பெருக்க வழி: அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,22:50 IST

மதுரை : கறவை மாடுகளில் பால் உற்பத்தி அதிகரிக்க தீவன முறைகள் குறித்து கால்நடை பராமரிப்புத் துறை கமிஷனர் எம்.ஆர்.மோகன் கூறியிருப்பதாவது: பால் கறக்கும் மாடுகளுக்கு சரிவிகித தீவனம் வழங்கப்பட வேண்டும். பசுவின் பால் உற்பத்தித் திறனை பொறுத்தும், அதன் உடல் எடையைப் பொறுத்தும் கறவைப் பசுக்களுக்கு பசுந்தீவனம், அடர்தீவனம், உலர்தீவனம் ஆகியவற்றை சரிவிகிதமாக கொடுக்க வேண்டும். அடர் தீவனம் வழங்குவதால், பால் உற்பத்தி அதிகரிப்பதுடன், மாட்டுக்கு தேவையான புரதச் சத்து, கொழுப்புச் சத்து கிடைக்கும். தீவனம் குறைவதால் பால் உற்பத்தி குறைவதுடன் நீண்ட கால தீமையாக பசுவின் சினைப்படும் சதவீதம் குறையும். இதனால் கன்று ஈனும் இடைவெளி அதிகரிப்பதுடன் நோய் எதிர்ப்பு திறனும் குறையும். தீவனம் குறைத்து வழங்குவதால் ஏற்படும் பொருளாதார இழப்பு பெரிய அளவில் இருக்கும். எனவே கால்நடை விவசாயிகள் தங்கள் பசுவினங்களுக்கு பசுந்தீவனம், அடர்தீவனம், உலர்தீவனத்தை சரிவகிதமாக வழங்குவது அவசியம்,என தெரிவித்துள்ளார்.

**விற்பனையாகாமல் வயல்களில் நெற்குவியல் : கிருஷ்ணாபுரம் விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,22:53 IST

மதுரை : மதுரை எழுமலை அருகே கிருஷ்ணாபுரம் பகுதியில் நெல் கொள்முதல் மையங்கள் இல்லாததால், அறுவடை செய்யப்பட்ட நெற்குவியல்கள் வாங்குவாரின்றி வயல்வெளிகளில் பல நாட்களாக கிடக்கின்றன.
கிருஷ்ணாபுரம் பகுதியில் பாசன நீரை நம்பி விவசாயிகள் சாகுடி செய்வது இல்லை.

பெரும்பாலும் கிணற்றுநீர் பாசனம் நடக்கிறது. இந்த ஆண்டு அதிக மழை பெய்ததால், தரிசு நிலங்களிலும் நெல் சாகுபடி நடந்தது. 2,500 ஏக்கருக்கும் அதிகமாக அறுவடை பணிகள் நடந்து வருகிறது. இரண்டு வாரங்களுக்கு முன் அறுவடையான வயல்களில் இருந்து வியாபாரிகள் மூடை 950 ரூபாய்க்கு (அரசு நிர்ணயித்த விலை 1050 ரூபாய்) நெல்கொள்முதல் செய்தனர். அறுவடை அதிகரித்ததால் நெல் கொள்முதல் செய்ய வியாபாரிகள் முன்வரவில்லை. விவசாயிகள் தேடிச் செல்லும் போது, மிகவும் குறைந்த விலையை நிர்ணயம் செய்கின்றனர். இதனால் பல நாட்களாக அறுவடை செய்யப்பட்ட நெற்கள் வயல்களிலே குவியலாக வைக்கப்பட்டுள்ளன.
மலைராஜன்: விலைகளை இடைத்தரகர்களே நிர்ணயிக்கிறார்கள். அறுவடையான நெல்லை விவசாயிகளால் வீடுகளில் பாதுகாக்கவும் முடியவில்லை. ஒரு சாக்கு 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு 1050 ரூபாய்க்கு விற்பனை செய்த நெல் இந்த ஆண்டு 700 ரூபாய்க்கு விற்கும் நிலை உள்ளது. வண்டிவாடகை, ஏற்று, இறகுமதி கூலி, தராசுவாடகை, கமிஷன் என ஒரு பெரும் தொகை வீணாகிவிடுகிறது. எந்த லாபமும் இல்லாமல் நெல் விற்கிறோம்.
பொம்முதுரை: விலை கேட்ககூடாது. எடைபோட்டு வைப்போம். வயலில் இருந்து வண்டியில் ஏற்றும் போது விலையை சொல்லுவோம், என வியாபாரிகள் விவசாயிகளை மிரட்டும் நிலை உள்ளது. பல நாட்களாக வயலில் நெற்குவியலை வைத்து பாதுகாத்தோம். இப்போது கிடைக்கும் விலைக்கு விற்றால் போதும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம், என்றனர்.
மதுரை மாவட்டத்தில் பல இடங்களில் அரசு நெல் கொள்முதல் மையங்களை துவங்கியுள்ளது. கிருஷ்ணாபுரம், எம்.கல்லுப்பட்டி பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் அரசு இப்பகுதியில் அறுவடை காலங்களில் கொள்முதல் மையங்கள் ஏற்படுத்த வேண்டும், என்பது தான் இப்பகுதி விவசாயிகளின் விருப்பமாக உள்ளது.

## "பயறு ஒன்டர்' நுண்ணூட்டம் அறிமுகம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,01:43 IST

ஆலங்குடி: ஆலங்குடி அருகேவுள்ள வம்பன் தேசிய வேளாண் அறிவியல் மையத்தில், "பயறு ஒன்டர்' என்ற புதிய நுண்ணூட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தலைவர் சின்னையன் கூறியதாவது: வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஃபிப்ரவரி மாதம் முதல் பயறு சாகுபடியில் வறட்சியை தாங்கி, 20 சதவீதம் அதிக மகசூலைத் தரக்கூடிய, "பயறு ஒன்டர்' எனும் புதிய நுண்ணூட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலையால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நுண்ணூட்டத்தின் செயல் விளக்க பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. விபரங்களுக்கு 04322-290321 என்ற வேளாண் அறிவியல் நிலைய தொலைப்பேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

**வன வளர்ப்பு முகமை பொதுக்குழு கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,23:29 IST

அரூர்: அரூர் வனத்துறை சார்பில் தேசிய வன வளர்ப்பு முகமையின் பொதுக்குழு, செயற்குழு கூட்டம் நடந்தது.
மாவட்ட வன அலுவலர் செல்வராஜ் தலைமை வகித்தார். வனப்பாதுகாப்பு, மரம் வளர்ப்பு உள்ளிட்டவைகளை குறித்து மாவட்ட வன அலுவலர் செல்வராஜ் விளக்கினார். கூட்டத்தில் கலந்து கொண்ட 30 வனக்குழு தலைவர்கள் சாலைவிதி, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நிறைவேற்ற கோரி விண்ணப்பித்தனர். "தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பு குறித்து விண்ணப்பிக்கலாம்' என கூட்டத்தில்தெரிவிக்கப்பட்டது. ரேஞ்சர்கள் மனோகரன், ராமசாமி, ராஜாமணி, வனத்துறை ஊழியர்கள், மலைவாழ் மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நீர்வள நிலவள திட்டபணிகள்: உலக வங்கி நிபுணர் குழு ஆய்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,23:35 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் நீர்வள நிலவள திட்டப்பணிகளின் செயலாக்கத்தை உலக வங்கி வேளாண் நிபுணர் குழுவினர் ஆய்வு நடத்தினர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2008-09ம் ஆண்டு முதல் பெண்ணை ஆற்று படுகையில் உள்ள நிலங்களில் நீர் வளத்தையும், நில வளத்தையும் பெருக்கும் பொருட்டு "அயம்வாம்' எனப்படும் நீர்வள நில வள திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அயம்வாம் திட்டப் பணிகளை உலக வங்கி நிபுணர்கள் எட்வர்ட் குக், பென் ஒபேரியான், ஆலோசகர்கள் ரவிச்சந்திரன், வித்யா சாகர், சந்திரகுமார், சுதாகர், கணேஷ், தோட்டக்கலை இணை இயக்குர் மோகன், வேளாண் வணிகத்துறை சுதாகர், வேளாண்மை இணை இயக்குனர் கணேசன் ஆகியோர் கொண்ட குழுவினர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.
தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம் மூலம் பெத்தகொல்லு கிராமத்தில் வீரிய ஒட்டு தக்காளி வயல், வேளாண்மை துறை மூலம் பூதிநத்தம் கிராமத்தில் ராகி நாற்றங்காள் மேட்டுப்பாத்தியில் விடப்பட்டு பராமரிப்பதையும், ஓசூர் உழவர் சந்தையில் கழிவாக உள்ள காய்கறி மற்றும் தழைகஔள் பயன்படுத்தி மூன்று மாதத்திற்கு ஒரு முறை 780 கிலோ மக்கிய மண்புழு உரம் தயாரிக்கும் பணியையும் நிபுணர் குழுவினர் ஆய்வு செய்தனர்.
பூதிநத்தம் கிராமத்தில் வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை மூலம் இடைத்தரகள் தலையீடு இல்லாமல் விவசாயிகளே விளைபொருட்களை நேரடி கொள் முதலீட்டார்களுக்கு

விநியோகம் செய்ய ஏதுவாக 22 லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள வேளாண் வணிக மையம், கால்நடை பராமரிப்பு துறை மூலமாக பயிரிட்டுள்ள கோ-3 ரக தீவன புல் வகையினையும், மீன் வளத்துறை மூலமாக 4 லட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு வருவதையும். தோட்டக்கலை துறை மூலம் கதிரேபள்பள்ளியில திசுவளர்ப்பு வாழை சாகுபடியையும் நிபுணர்கள் பார்வையிட்டனர்.
ஆய்வின் முடிவில் கிருஷ்ணகிரி மாவட்டதத்தில் அயம்வாம் திட்டம் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும், விவசாயிகளின் வருமானத்தை பெருக்க ஏற்றதாக திட்டம் அமைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
ஆய்வின் போது, மாவட் வேளாண் இணை இயக்குனர் ராஜன், சென்னை கால்நடை பராமரிப்பு துறை கூடுதல் இயக்குனர் தங்கவேல், தர்மபுரி மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் ஞானஉபகாரம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாச்சியப்பன், வேளாண் பொறியில் துறை செயற்பொறியாளர் அருள்மொழி, தோட்டக்கலை துணை இயக்குனர் மோகன், மீன் வளர்ப்பு துறை உதவி இயக்குனர் மதனகோபால், வேளாண் அலுவலர் பச்சையப்பன் ஆகியோர் உட்பட பலர் உடன் இருந்தனர்.

**ஆத்மா திட்ட செயல் விளக்க முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,23:35 IST

கிருஷ்ணகிரி: வேப்பனப்பள்ளி ஒன்றியம் பல்லேரிப்பள்ளி கிராமத்தில் பட்டுவளர்ச்சி துறை சார்பில் ஆத்மா திட்ட மூலம் செயல் விளக்க முகாம் நடந்தது.
கிருஷ்ணகிரி பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குனர் கதிர்வேலு தலைமை வகித்தார். மத்திய பட்டுவாரிய விஞ்ஞானி மாசிலாமணி பட்டு புழுவினை தாக்கும் கூட்டுப்புழுக்களை அழிக்கும் ஒட்டுண்ணியான "கோலிங்க்ஸ் தைமஸ்' பயன்படுத்தும் முறை, இலை சுருட்டு புழு, முட்டை ஒட்டுண்ணி, டிரைக்கோ கிராம்மா கிலோனிக்ஸ் பயன்படுத்தும் முறை குறித்து செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.
துறையின் மானிய விபரங்கள் மற்றும் தற்போது அதிகரித்து வரும் பட்டுக்கூடுகளின் விலையை கொண்டு புதிய நடவு மேற்கொள்ள பட்டு விவசாயிகளுக்கு விளக்கி கூறப்பட்டது. முகாமில் கலந்து கொண்ட விவசாயிகளின் தொழில் நுட்ப சந்தேகங்களுக்கு பதில் அளிக்கப்பட்டது. மேலும், ஊசி ஈ கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி, இலை சுருட்டு புழு அழிக்கும் ஒட்டுண்ணி, வேப்பம்புண்ணாக்கு, உயிர் உரம் , அசோஸ்பைரில்லம் ஆகியவை பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை வேப்பனப்பள்ளி பட்டு ஆய்வாளர் ரங்கநாதன் செய்திருந்தார். வி.மாதேப்பள்ளி இளநிலை ஆய்வாளர் பெரியசாமி நன்றி கூறினார்.

**தக்காளி விலை ரூ. 10 ஆக சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,01:47 IST

ஈரோடு: தக்காளி வரத்து அதிகரிப்பால் நாளுக்கு நாள் ஈரோடு காய் மார்க்கெட்டில் விலை படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது.நடப்புபாண்டு துவக்கத்தில் இருந்தே தக்காளி விலை தாருமாறாக உயர்ந்து கொண்டே சென்றது. தமிழகத்தில் பலத்த மழை காரணமாக, தக்காளி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. தோட்டத்திலேயே தக்காளி பழம் அழுகியதால், மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்தது. விலையேற்றத்தால், பொதுமக்களும் தக்காளியை கண்காட்சி பொருளாகவே பார்த்து வந்தனர்.
வெளிமாநிலங்களில் இருந்தும், தமிழகத்தில் சேலம், ஒசூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய பகுதியில் இருந்தும் ஈரோடு காய்கறி மார்க்கெட்டுக்கு கிராஸ் தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. இதனால், ஒரே வாரத்தில் கிலோ 50 ரூபாயில் இருந்து 10 ரூபாயாக விலை குறைந்துள்ளது.நேதாஜி காய்கறி மார்க்கெட் வியாபாரி கூறியதாவது: கர்நாடாக, ஆந்திரா மற்றும் தமிழகத்தில் ஓசூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் ஆகிய பகுதியில் இருந்து ஈரோடு நேதாஜி காய் மார்க்கெட்டுக்கு தினமும் 25ல் இருந்து 30 டன் தக்காளி வரத்தாகிறது. இங்கிருந்து 200க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகள் பயிற்சி கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,23:40 IST

ஊட்டி : ஊட்டி குந்தசப்பையில் விவசாயிகள் பயிற்சி கூட்டம் நடந்தது.
இந்த பயிற்சியில் தேயிலைக்கு நேரடி உரமிடல், கவாத்து செய்தல், உருளை கிழங்கில் பொன்நிற நூற்புழு கட்டுப்பாடு, முட்டை கோசில் நுண்ணூட்ட சத்து குறைபாடு நிவர்த்தி, காரட் பயிரில் இலை கருகல் கட்டுப்பாடு, மண்மாதிரி எடுத்தல் குறித்த பயிற்சியும், செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது. தோட்டக்கலை உதவி இயக்குனர் குணசேகரன், உழவர் பயிற்சி நிலையம் துணை வேளாண்மை அலுவலர் ராஜன், உதவி வேளாண்மை அலுவலர்கள் மோகன், மூர்த்தி, அஜ்ஜன் பேசினர்.
உபாசி பயிற்சியாளர் ராஜ்குமார் பேசுகையில்,""தேயிலையில் சிவப்பு சிலந்தி பூச்சியை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு ஓ மைட் 200 மில்லி மருந்தை 160 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்,'' என்றார்.

**நவீன முறையில் பயிரிட்டால் நோயின்றி நல்ல மகசூல் கிடைக்கும்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,23:40 IST

கூடலூர் : "விவசாய பயிர்களை நவீன முறையில் பயிரிடுவதன் மூலம் நோய்களை தடுத்து அதிக மகசூல் பெற முடியும்,' என கூடலூர் தோட்டகலை துறை உதவி இயக்குனர் அறிவுறுத்தினார். தேசிய தோட்டக்கலை இயக்கம், கூடலூர் தோட்டகலை சார்பில் விவசாயிகளுக்கு ஐந்து நாள் பயிற்சி முகாம் கூடலூர் "ராக்கார்டன்' விடுதியில் துவங்கியது.

தோட்டகலை உதவி இயக்குனர் தமிழ்மணி முகாமை துவக்கி வைத்து பேசுகையில்,""விவசாயிகள் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய விவசாயம் செய்து, அதிக மகசூல் பெற்று பயனடையும் வகையில் இந்த 5 நாள் முகாம் துவங்கியுள்ளது. நான்கு நாள்கள் விளக்க பயிற்சியும், கடைசி நாள் களப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

பயிற்சியில், பல்வேறு பயிர்களின் நவீன முறையில் உற்பத்தி செய்தல், உரமிடும் முறை, உற்பத்தி பொருள்களை சந்தை படுத்துதல், மண் பரிசோதனையில் அவசியம் குறித்து ஆராய்ச்சியாளர்கள் மூலம் விளக்கப்படுகிறது. பயிற்சியில் விவசாயிகளுக்கு எழும் சந்தேகங்களுக்கும் உடனடியாக உரிய விளக்கம் அளிக்கப்படும்," என்றார்.

ஊட்டி தோட்டக்கலை ஆராய்ச்சி மைய உதவி பேராசியர் வசந்தா பேசுகையில், ""வாழை பழங்கள் உணவு செரிமானத்துக்கும், ரத்த ஒட்டம், குழந்தைகளின் வயிற்று பிரச்னைக்கும்; எலும்பு வளர்ச்சிக்கும், கண் பார்வைக்கும் நல்லது. திசு வளர்ப்பு முறையில் உற்பத்தி செய்யப்படும் வாழை கன்றுகள் நடவு செய்வதன் மூலம், ஒரே நேரத்தில் பூ பூத்து, காய் காய்த்து அறுவடை செய்ய முடியும். குறிப்பிட்ட ஒரு பகுதியில் தொடர்ந்து வாழை மட்டும் பயிரிடாமல், இடைப்பட்ட காலத்தில் மாற்று பயிரிட்டு விளைவித்து, மீண்டும் வாழை நடவு செய்வதன் மூலம் நல்ல மகசூல் கிடைக்கும்," என்றார்.

கூடலூர் தொடக்க வேளாண் கூட்டுறவு மண் ஆய்வாளர் ஆஜி பேசுகையில்,""விவசாய நிலங்களில் மண் பரிசோதனை மிகவும் அவசியம். பரிசோதனைக்கு ஒரே இடத்தில் ஒரே மாதிரி மண் எடுக்காமல், மேல் மண், அடி மண் தனித்தனியாக 20 இடங்களில் மொத்தம் 500 கிராம் மாதிரி மண் எடுக்க வேண்டும். மண் பரிசோதனையில் நோக்கம் குறித்து மாதிரி மண்மாதிரியில் குறிப்பிட வேண்டும். பரிசோதனைக்கு நடைபாதை, குப்பை மற்றும் மாட்டு தொழுவங்கள் அருகே மாதிரி மண் தவிர்த்து நடுப்பகுதியில் மண் எடுக்க வேண்டும்," என்றார்.

"வேளாண்மை விற்பனை' குறித்து வேளாண்மை அலுவலர் ரமேஷ், "மலைப்பகுதி மேம்பாட்டு திட்டப் பணிகள்' குறித்து சமுதாய ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி ஆகியோர் விளக்கினர். முகாமில், கூடலூர் தோட்டக்கலை கிடங்கு மேலாளர் ராமசாமி வரவேற்றார். தோட்டக்கலை அலுவலர் சுரேஷ் ராஜா, உதவி வேளாண்மை அலுவலர்கள் அம்பிராஜ், சுப்பன், ராதாகிருஷ்ணன் மற்றும் 135 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**ஏலக்காய் "ஈ ஆக்ஷன்' மையம் இன்று திறப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,23:18 IST

கம்பம் : கம்பமெட்டு அருகே புத்தடியில் ஸ்பைசஸ் வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஏலக்காய் "ஈ ஆக்ஷன்' மையத்தை இன்று மத்திய வர்த்தக துறை இணை அமைச்சர் ஆனந்தசர்மா திறந்து வைக்கிறார்.
இடுக்கி மாவட்டத்தில் கே.சி.பி.எம்.சி., மாஸ் எண்டர்பிரைசஸ், எஸ்.டி.சி.எல்., சி.பி.ஏ., சி.பி.சி.எம்.எஸ். எஸ்.ஐ.சி.சி., ஹெக்டர் சிஸ்டம் ஆகிய ஏலக்காய் ஆக்ஷன் கம்பெனிகள் உள்ளன. ஆக்ஷன்கள் அந்தந்த கம்பெனியின் அலுவலகங்களில் நடந்து வந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு ஸ்பைசஸ் வாரியம், அவ்வாறு நடத்துவதற்கு தடை விதித்தது. ஏலம் நடத்துவதற்காக கம்பமெட்டு அருகே உள்ள புத்தடியில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "ஸ்பைசஸ் பார்க்' ஒன்றை அமைத்தது.
இதில் ஏலக்காய் மற்றும் மிளகு சுத்தம் செய்தல், இருப்பு வைத்தல், பேக்கிங், பாங்கிங், ஏற்றுமதி தகவல்கள் உள்ளிட்ட பல வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. இந்த மையத்தின் திறப்பு விழா இன்று நடக்கிறது. மத்திய தொழில் மற்றும் வர்த்தக துறை இணை அமைச்சர் ஆனந்த்சர்மா திறந்து வைக்கிறார். கேரள மாநில எதிர்கட்சி தலைவர் உம்மன்சாண்டி, இடுக்கி எம்.பி., தாமஸ், ஸ்பைசஸ் வாரிய தலைவர் வி.ஜே.குரியன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

**நவரை சாகுபடிக்கு தண்ணீர் விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,21:48 IST

கிள்ளை : நவரை சாகுபடிக்கு நடவு செய்துள்ள மற்றும் செய்யப்பட உள்ள பகுதிகளை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். காவிரி நீரை நம்பி சிதம்பரம் கிழக்குப் பகுதியில் கான்சாகிப் வாய்க்கால் மூலம் 9,000க்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது. இதில் 2000க்கும் மேற்பட்ட ஏக்கரில் தண்ணீர் தட்டுப்பாட்டால், தை பட்டத்தில் சம்பா சாகுபடி செய்ய முடியாத நிலை நிலவி வருகிறது. சிதம்பரத்திற்கும் கிழக்குப் பகுதியில் உள்ள 40க்கும் மேற்பட்ட கிராமத்தினர், நவரை சாகுபடியை நம்பி கடந்த மாதம் விதை நேர்த்தி செய்து நடவு செய்ய ஆயத்தமான நிலையில் தண்ணீர் வரத்து குறைந்ததால்நடவு செய்ய நாற்று பறிக்க முடியாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என கடந்த வாரம் தினமலர் இதழில் செய்தி வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து நவரை சாகுபடிக்கு நடவு செய்துள்ள மேலும் நடவு செய்ய உள்ள

பகுதிகளான பொன்னந்திட்டில் இருந்து தெற்கு பிச்சாவரம் வரை கலெக்டரின் நேர்முக உதவியாளர் அசோகன், விவசாய அலுவலர் பூவராகவன் உள்ளிட்ட குழுவினர்கள் ஆய்வு செய்தனர். நவரை சாகுபடிக்கு ஏற்ற வகையில் மார்ச் மாதம் வரை தண்ணீர் தட்டுப்பாடில்லாமல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**பூக்கள் பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,21:44 IST

சிறுபாக்கம் : சிறுபாக்கம் வேப்பூர் பகுதியில் ஆட்கள் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பூக்கள் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். சிறுபாக்கம் மற்றும் வேப்பூரை சுற்றியுள்ள பகுதி விவசாயிகள் தற்போது பூக்கள் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். செலவினம், கூலி ஆட்கள் தட்டுப்பாடு, குறைவான நீர் பாசனம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தங்களது நீர்பாசன நிலங்களில் அரை ஏக்கர் முதல் ஒரு ஏக்கர் வரை பூக்களை பயிரிடுகின்றனர். அதிகாலையிலே பூக்களை பறித்து கடைகளுக்கு அனுப்பிவிட்டு மற்ற நேரங்களில் விவசாய வேலைகளை பார்க்கலாம் என்பதால் பெரும்பாலான விவசாயிகள் ஆர்வத்துடன் பயிரிட்டு வருகின்றனர்.மல்லிகை, கனகாம்பரம், சாமந்தி, சம்மங்கி, ரோஸ், சிந்தா மணி உள்ளிட்ட பூச்செடிகளை அதிக அளவில் பயிரிட்டுள்ளனர். விருத்தாசலம், ஆத்தூர், வாழப்பாடி ஆகிய பகுதிகளில் உள்ள பூ மார்க்கெட்டுகளுக்கு பூக்களை அனுப்பி வைக்கின்றனர்.

**மானிய விலையில் நடவு இயந்திரங்கள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 12,2011,21:43 IST

கடலூர் : அறுவடை மற்றும் நெல் நடவு இயந்திரங்களை வேளாண் பொறியியல் துறை மூலமாக மானிய விலையில் வழங்க வேண்டும் என குறைகேட்புக் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். கடலூர் செம்மண்டலம் வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நடந்தது. இணை இயக்குனர் இளங்கோவன் தலைமை தாங்கினார். துணை இயக்குனர் தனவேல் (வணிகம்), தோட்டக் கலை அலுவலர் ரவிச்சந்திரன், இ.ஐ.டி., மேலாளர் கண்ணன் (கரும்பு), வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) தனசேகரன், கால்நடைத்துறை உதவி இயக்குனர் சுமதி மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். குறிஞ்சிப்பாடி மற்றும் குள்ளஞ்சாவடி பகுதியில் பகலில் மூன்று மணி நேரம் மின் வினியோகம் நிறுத்தப்படுகிறது. இரவு நேரங்களில் எப்போது மின்தடை ஏற்படுகிறது என தெரியாத நிலை

ஏற்பட்டுள்ளது. இது போன்று முன்னறிவிப்பு இல்லாமல் மின்சாரம் நிறுத்தப்படுவதால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. அறுவடை மற்றும் நெல்நடவு இயந்திரங்களை வேளாண் பொறியியல் துறை மூலமாக மானிய விலையில் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

**விவசாய தோட்டங்களில் யானைகள்: நடவடிக்கைக்கு எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,23:14 IST

பொள்ளாச்சி:மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள விவசாயத்தோட்டங்களில், யானைகள் புகுந்து அட்டகாசம் செய்வதால், பயிர்கள் சேதமடைந்து விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.பொள்ளாச்சி சப்-கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் முறையீட்டு குழு கூட்டம் வருவாய் கோட்டாட்சியர் அழகிரிசாமி தலைமையில் நடந்தது. பொள்ளாச்சி தாசில்தார் ரவிச்சந்திரன், மண்டல துணை தாசில்தார்கள் சரவணன், வாசுகி, ராதாமணி, ஜக்குபாய் ஆகியோரும், தோட்ட கலை, வேளாண், பொதுப்பணி, போக்குவரத்து, மின்வாரியம், கால்நடை பராமரிப்பு, நெடுஞ்சாலை, வருவாய், அரசு போக்குவரத்துக்கழக துறைகளை சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.கூட்டத்தில், விவசாயிகள் பேசியதாவது:மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள விவசாயத்தோட்டங்களில், யானைகள் புகுந்து அட்டகாசம் செய்வதால், பயிர்கள் சேதமடைந்து விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதை தடுக்க நடவடிக்கை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.விவசாய பயன்பாட்டிற்கு இயக்கும் மின் மோட்டார் பயன்படுத்த பகலில் ஆறு மணிநேரமும், இரவில் எட்டு மணிநேரமும் மின்சாரம் வழங்கப்படும் என அரசு அறிவித்திருந்தது. ஆனால், தற்போது பகலில் மூன்று மணி நேரமும், இரவில் நான்கு மணி நேரமும் மட்டுமே மின்சாரம் வினியோகிக்கப்படுகிறது. இதனால், விவசாயிகளுக்கு பயனளிக்காமல் உள்ளது.மின்வாரிய அலுவலகங்களில், ஒவ்வொரு பகுதியை சேர்ந்த மின் ஊழியர்களின் மொபைல் எண் எழுதி வைக்க வேண்டும். இதனால், விவசாயிகள் நேரடியாக அந்தந்த ஊழியர்களையோ அல்லது அதிகாரிகளையோ தொடர்பு கொண்டு விளக்க பெற முடியும். கூட்டுறவு வங்கிகளில் மூன்று மாதங்களாக விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்குவதில்லை.இவ்வாறு, விவசாயிகள் பேசினர்.கூட்டத்தில், ஆர்.டி.ஓ., பேசும் போது, "விவசாய விளை நிலங்களில், யானை புகுந்து பாதிப்பு ஏற்படுத்துவது குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கும், அரசுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு தகுந்த உதவி செய்யப்படும். விவசாயிகள் சார்பில் தெரிவிக்கப்பட்ட குறைகள் மீது தகுந்த ஆய்வு நடத்தி விரைவில் தீர்வு காணப்படும், என்றார்.மின்வாரிய அதிகாரிகள் பேசும்

போது, "விவசாயிகள் தெரிவிக்கும் மின்சாரம் வினியோகிக்கும் பிரச்னை 3 நாட்களாக நீடிக்கிறது. அரசு இலவசமாக வழங்கும் மின் மோட்டாருக்கு விண்ணப்பிக்காத விவசாயிகளுக்கு, வாய்ப்பளிக்கும் வகையில், வரும் மார்ச் 3ம் தேதி வரை விண்ணப்பிக்க அறிவிக்கப்பட்டுள்ளது' என்றனர்.

**வரத்து அதிகரிப்பால் வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,23:10 IST

கிணத்துக்கடவு:தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால், கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டில் தக்காளி விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.கிணத்துக்கடவு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில், தக்காளி அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டில் நேற்று விவசாயிகள் அதிகளவில் தக்காளிகளை கொண்டு வந்து ஏலத்தில் வைத்தனர்.அங்கு வியாபாரிகள் அதிகளவில் வராததால், தக்காளி விலை கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ஐந்து ரூபாய்க்கு ஏலம் சென்றது. கடந்த வாரத்தில், இந்த ரக தக்காளிகள் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.7.50க்கு ஏலத்தில் சென்றது. இந்த விலை வீழ்ச்சிக்கு, வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து அதிகளவில் கோவை மாவட்டத்திற்கு தக்காளி விற்பனைக்கு வந்தததது தான் காரணம் என்று கூறப்படுகிறது. இருப்பினும், இவ்விலை வீழ்ச்சியால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**"தேங்காய் விற்க தயக்கம் வேண்டாம்'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,23:06 IST

கோவை: "மார்ச்சில் விலை வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளதால், இருப்பு வைத்துள்ள தேங்காயை விற்பனை செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும்' என, வேளாண் பல்கலை அறிவுறுத்தியுள்ளது. கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலை அறிக்கை:விவசாயத்தில் தென்னை முக்கியப்பங்கு வகிக்கும் நிலையில், தேங்காய் எண்ணெய் மற்றும் கொப்பரை தேங்காய் உலக தேங்காய் வர்த்தகத்தை நிர்ணயிக்கின்றன. ஆண்டுக்கு 55 லட்சம் டன் தேங்காய் உலகளவில் உற்பத்தியாகிறது; இந்தியாவின் பங்கு 22 சதவீதம். கோவையில் அதிகளவில் தென்னை விவசாயம் உள்ளது. தேங்காய்களை பறித்தவுடன், உடனடியாக விற்பனை செய்யலாமா அல்லது இருப்பு வைக்கலாமா என விவசாயிகளிடம் சந்தேகம் நிலவுகிறது. பல்கலையின் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின், உள்நாட்டு ஏற்றுமதி சந்தை தகவல் மையம் சார்பில் ஆய்வு

மேற்கொள்ளப்பட்டது. பொள்ளாச்சி சந்தையை மையமாக கொண்ட ஆய்வின்படி, பிப்., இரண்டாவது வாரம் வரை ஏறுமுகத்திலுள்ள தேங்காய் விலை, பின் படிப்படியாக குறையும் வாய்ப்புள்ளது. பிற எண்ணெய் வித்துக்களின் பொதுவான விலை உயர்வு மற்றும் தேங்காய் எண்ணெயின் தேவை ஆகியவை விலை அதிகரிக்க காரணமாக உள்ளது. அதிகமழையால் தென்னை மரங்களில் காய்ப்பிடிப்பு பாதிக்கப்பட்டுள்ளது; கொப்பரை தேங்காய் வரத்து குறைந்ததாலும், பண்டிகை கால தேவை காரணமாகவும் தேங்காய்க்கு விலை அதிகமாகவே இருந்தது. குவிண்டால் ரூ.1,125 முதல் 1,350 வரை விலை நீடித்தது. தொடர்ந்து விலை வீழ்ச்சியடைந்து மார்ச் வரை குவிண்டால் ரூ.1,050 முதல் 1,275 வரை நீடிக்கக்கூடிய வாய்ப்புள்ளது. எனவே, தேங்காயை இருப்பு வைத்தால் லாபம் கிடைக்காது என்பதால், உடனடியாக விற்பனை செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

**வேளாண் பல்கலை விஞ்ஞானிகளுக்கு விருது**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,23:01 IST

கோவை:கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலை விஞ்ஞானிகள் எழுதிய புத்தகத்துக்கு மாநில அரசின் விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலை அறிக்கை:கடந்த 2010ம் ஆண்டின் சிறந்த தமிழ் வேளாண்மை புத்தகமாக, கோவை வேளாண் பல்கலை முன்னாள் பதிவாளர் சுவாமியப்பன் மற்றும் பூச்சியியல் துறை பேராசிரியர் கல்யாண சுந்தரத்தின் "வளம் குன்றா வேளாண்மைக்கு உயிரியல் பூச்சிக் கட்டுப்பாடு' தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளது.சென்னையில் நடந்த திருவள்ளுவர் நாள் மற்றும் அரசின் விருது வழங்கும் விழாவில், சான்றிதழும், ரூ.30 ஆயிரம் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது. "பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள், உயிரியியல் பயிர் பாதுகாப்பின் முக்கியத்துவம், இயற்கை எதிரிகளின் பயன்கள், நன்மை செய்யும் ஒட்டுண்ணிகள், இறை விழுங்கிகளின் உற்பத்தி தொழில்நுட்பங்கள், உயிரியியல் காரணிகளை வயல்வெளிகளில் விட்டு பயன்படுத்தும் முறைகள் மற்றும் இயற்கை எதிரிகளை பாதுகாக்கும் வழிமுறைகள்' குறித்து புத்தகத்தில் விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது. படைப்பாளர்கள் இருவரும் பல்கலையில் நல்லாசிரியர் விருது பெற்றிருப்பதும், தேசிய உயிரியியல் ஆய்வுத் திட்டத்தில் பேராசிரியர் கல்யாணசுந்தரம் பணிபுரிவதும் குறிப்பிடத்தக்கது.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

**பயிர் காப்பீடு செய்தாலும் இழப்பீடு கிடைக்காததால் விரக்தி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,22:46 IST

ராஜபாளையம்:இயற்கை பேரிடர் காலங்களில் ஏற்படும் பயிர் சேதத்திற்கு உரிய இழப்பீடு வழங்கப்படுவதில்லை. இதனால் தனிநபர் பயிர் காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்தவேண்டும் என ராஜபாளையம் விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.ராஜபாளையம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் நெல், பருத்தி, வாழை, கரும்பு, தென்னை, மா, மக்காச்சோளம், காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழையை நம்பியே விவசாயம் நடக்கிறது. மலையில் தொடர்மழை பெய்தால், ராஜபாளையத்தில் வெள்ள பாதிப்பு ஏற்படுகிறது. பயிர்கள் சேதமாகின்றன. மற்ற கிராமங்களில் கண்மாய், கிணற்று பாசனத்தில் விவசாயம் செய்வதால், வெள்ள பாதிப்பு இல்லை.இந்நிலையில் தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில், கடந்த ஆண்டு பிரிமியம் செலுத்திய ராஜபாளையம் விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்கவில்லை. மொத்தமாக இல்லாமல், குறிப்பிட்ட இடத்தில் மட்டும் தான் பாதிப்பு என அதிகாரிகள் காரணம் கூறுகின்றனர்.தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ராமசந்திர ராஜா கூறியதாவது: கிராமமே பாதிக்கப்பட்டுள்ளது. அதை மாவட்ட நிர்வாகம் பதிவு செய்யவேண்டும். அதற்கு முன் புள்ளியியல், வேளாண் துறைகள் மகசூல் மதிப்பீடு செய்து அதன்பின் தான் இழப்பீடு கிடைக்கும் என்றார்கள்.

ஏற்கனவே காப்பீடு செய்த பலருக்கு, இதுவரை இழப்பீடு கிடைக்கவில்லை. காப்பீடு செய்யப்பட்ட டூ-வீலர் தொலைந்தால், எப்.ஐ.ஆர்., இருந்தால் இழப்பீடு பெறலாம். விவசாயிகளுக்கு இழப்பீடு கொடுக்க ஏகப்பட்ட நிபந்தனைகள் உள்ளன. இந்த திட்டமே கண்துடைப்பு போல உள்ளது. அதற்கு மாற்றாக, தனிநபர் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்த கோரியுள்ளோம். இதற்காக பல போராட்டங்கள் நடத்தியும் மத்திய, மாநில அரசுகள் கண்டுகொள்ளாமல் உள்ளன. விவசாயிகள் விரக்தியில் உள்ளனர், என்றார்.விவசாயி முருகேசன் கூறியாவது: கால்நடைகளுக்கு காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயி, தொழில்முறையில் பாதிக்கப்பட்டால், இழப்பீடு வழங்கப்படுவதில்லை. ஒட்டுமொத்தமாக பாதிப்பு இருக்கவேண்டும் என்கிறார்கள். தனிநபர் காப்பீடு திட்டம் அமல்படுத்த வேண்டும். பாதிக்கப்படும் விவசாயிக்கு இதன்மூலம் இழப்பீடு கிடைக்கும், என்றார்.விளைநிலங்கள் பிளாட்டுகளாக மாறும் இந்த சூழலில், விவசாயிகள் பிரச்னையை அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது, விவசாயத்திற்கே உலை வைப்பது போல் உள்ளது.

**பருத்தி விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,23:00 IST

அன்னூர்:அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் பருத்திக்கு வரலாறு காணாத விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாராந்திர பருத்தி ஏல விற்பனை வியாழன் தோறும் நடக்கிறது. நேற்று நடந்த ஏல விற்பனையில் 92 விவசாயிகள் பருத்தி விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். ஏலத்தில் டி.சி.எச்., ரக பருத்தி ஒரு குவிண்டால் குறைந்த பட்சம் 7,400 ரூபாய் முதல் 7,870 ரூபாய் வரையும், ஆர்.சி.எச்., ரகம் குறைந்த பட்சம் 6,550 முதல் 6,700 வரையும், போல்காட் ரகம் 6,500 ரூபாய் முதல் 6,640 ரூபாய் வரையும் விற்பனையானது. மொத்தம் 266 மூட்டை பருத்தி ஏல விற்பனை செய்யப்பட்டது. ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப் பாளர் ரமேஷ்குமார் கூறுகையில்,""கடந்த வாரத்தை விட பருத்திக்கு குவிண்டாலுக்கு ரூ.1,000 கூடுதல் விலை கிடைத்துள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கப்பட்டதிலிருந்து இதுவரை பருத்திக்கு இந்த விலை கிடைத்ததில்லை. பருத்திக்கு வரலாறு காணாத விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்'' என்றார்.

**விவசாயிகள் கனவை கானல் நீராக்கிய இரண்டு ஏக்கர் திட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 11,2011,21:29 IST

குஜிலியம்பாறை:இரண்டு ஏக்கர் இலவச நில திட்டத்தை, அரசு முறையாக செயல்படுத்தாததால், பெரும்பாலான நிலங்கள் தரிசாக காணப்படுகின்றன.கடந்த 2006 சட்டசபை தேர்தல் வாக்குறுதிப்படி, தி.மு.க., அரசு பதவியேற்றதும், இலவசமாக இரண்டு ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியது. நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கு, புறம்போக்கு நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு பிரித்து வழங்கப்பட்டன. திண்டுக்கல் மாவட்டத்தில், முதன் முறையாக ஆர்.கோம்பையில், 2006 செப்.,17ல் அமைச்சர் ஐ.பெரியசாமி இத்திட்டத்தை துவக்கி வைத்தார். மலையடிவார பகுதியில், 33 பயனாளிகளுக்கு, 66 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. துவக்கிய வேகத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில், மூன்று ஆழ்துளை கிணறுகள், பைப் லைன், நீர்தேக்க தொட்டி அமைக்கப்பட்டது. பிறகு சொட்டு நீர் பாசனமும், பழமரக் கன்றுகளும் வழங்கப்பட்டன. அதன் பிறகு அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை. ஆழ்துளை கிணறுகள் பழுதடைந்ததால், பழ கன்றுகள் காய்ந்து, சொட்டு நீர் பைப்கள் மட்டுமே குறுக்கும், நெடுக்குமாக தென்படுகின்றன. காடு முழுவதும் ஆள் உயரத்திற்கு அரளி செடிகள் முளைத்துள்ளன. இங்கு

செல்ல, இதுவரை ரோடு வசதி இல்லை.விவசாயி ஆறுமுகம் கூறியதாவது: கூலி வேலை தேடி வெளியூர் சென்ற எங்களுக்கு, இலவச நிலம் கிடைத்ததால், இங்கு வந்தோம். நகைகளை விற்று, நிலத்தை சமன் செய்தோம். கடன் வாங்கி கண்வலி செடி பயிரிட்டும், தண்ணீர் இல்லாததால் காய்ந்து விட்டது.

கூலி வேலைக்கு சென்று தான் குடும்பத்தை காப்பாற்றுகிறேன். இங்கு, மூன்று ஆழ்துளை கிணறுகள் அமைத்ததில், இரண்டில் மட்டுமே சிறிது தண்ணீர் இருந்தாலும், முறையாக கிடைப்பதில்லை. இரண்டு ஏக்கர் நிலம் பெற்ற ஒருவர், மலையை ஒட்டியுள்ள நான்கு ஏக்கர் புறம்போக்கு நிலத்தை வளைத்து, 400 தென்னை மரங்களை வைத்துள்ளார். அந்த நிலத்திற்கு, இலவச நில ஆழ்துளை கிணற்று நீரை பாய்ச்சுகிறார். மற்றவர்களுக்கு விட மறுப்பதால் வேறு யாரும் இங்கு விவசாயம் செய்ய முடியவில்லை. அதிகாரிகளிடம் பலமுறை மனு கொடுத்தும் நடவடிக்கை இல்லை," என்றார்.ஒரு திட்டத்தை துவக்கும் அரசு, அது முறையாக செயல்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும். இல்லை எனில் அது வீணான செலவாகத்தான் இருக்கும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *பால் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி சூலூரில், கறவை மாடுகளுடன் பால் உற்பத்தியாளர்கள் போராட்டம்*



சூலூர் தாலுகா அலுவலகம் எதிரே பால் உற்பத்தியாளர்கள் கறவை மாடுகளுடன் நூதன போராட்டத்தில் ஈடுபட்ட போது எடுத்த படம்.

சூலூர், பிப்.12–

பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கக்கோரி சூலூர் தாலுகா அலுவலகம் எதிரே பால் உற்பத்தியாளர்கள் கறவை மாடுகளுடன் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கறவை மாடுகளுடன் நூதன போராட்டம்

பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.5–ம், எருமைப்பாலுக்கு லிட்டருக்கு ரூ.8–ம் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கக்கோரி பால் உற்பத்தியாளர்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டம், சாலை மறியல் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்த வகையில் கோவை மாவட்டம் சூலூர் தாலுகா அலுவலகம் முன்பு கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம் சார்பில் நேற்று காலை கறவை மாடுகளுடன் நூதன போராட்டம் நடைபெற்றது.

சூலூர் மற்றும் சுல்தான்பேட்டை சுற்றுப்பகுதியை சேர்ந்த ஏராளமான பால் உற்பத்தியாளர்கள், மற்றும் விவசாயிகள் தங்களது கறவை மாடுகளுடன் போராட்டத்தில் கலந்துக் கொண்டனர். அதுபோல பிற பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் மற்றும் ம.தி.மு.க.வினர், சமத்துவ மக்கள் கட்சியினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பால் காய்ச்சி வினியோகம்

இந்த நூதன போராட்டத்திற்கு கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாநில தலைவர் என்.எஸ்.பழனிசாமி தலைமை தாங்கினார். ம.தி.மு.க மாநில விவசாய அணி பொதுச்செயலாளர் பொன்னுசாமி, கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ஏ.கே.சண்முகம் மாநகர மாவட்ட தலைவர் தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

போராட்டத்தின் போது, அரசுக்கு குறைந்த விலைக்கு பால் வழங்குவதை விட பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கலாம் என்பதை வலியுறுத்தும் வகையில் சம்பவ இடத்திலேயே கறவை மாடுகளிடம் இருந்து பால் கறந்து அங்கேயே கியாஸ் அடுப்பு வைத்து பால் காய்ச்சி பொது மக்களுக்கு இலவசமாக வழங்கினார்கள்.

சாலை மறியல் போராட்டம்

போராட்டத்தின்போது என்.எஸ்.பழனிச்சாமி கூறியதாவது:–

பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கக்கோரி கடந்த 7–ந் தேதி முதல் பால் உற்பத்தியாளர்கள் பல்வேறு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் அரசு இத்தகைய போராட்டங்களை கண்டுகொள்ளவில்லை. விலை உயர்வு குறித்து

பேச்சுவார்த்தை நடத்தவும் அழைக்கவே இல்லை.

எனவே எங்கள் போராட்டத்துக்கு வெற்றி கிடைக்கும்வரை போராட்டம் தொடரும். மேலும் பால் மாடுகளுக்கு போடப்படும் கலப்பு தீவனம், புண்ணாக்கு, தவிடு போன்றவற்றை நிறுத்திவிட முடிவு செய்துள்ளோம். பாலை சொசைட்டிக்கு வழங்குவதை நிறுத்தி விடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வருகிற 13–ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் பல்லடம்–உடுமலை ரோட்டில் கேத்தனூரில் 100 கால்நடைகளுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.


இவ்வாறு பழனிச்சாமி கூறினார்.

நெற்றியில் கறுப்புத்துணி

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பினார்கள். அப்போது பால் கொள்முதல் விலையை உயர்த்தி பால் உற்பத்தியாளர்களை வாழவிட வேண்டும், தவிடு, புண்ணாக்கு போன்றவற்றுக்கு மானியம் வழங்கவேண்டும், டாஸ்மாக் கடைகளை மூடிவிட்டு பால்பூத்துகளை திறக்கவேண்டும், பால் உற்பத்தியாளர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும். 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை விவசாயத்துக்கு உகந்ததாக மாற்ற வேண்டும் உள்ளிட்ட பல கோஷங்களை எழுப்பினார்கள். பெண்கள் பலர் கோரிக்கை அட்டைகளை கையில் ஏந்தி நின்றனர். கறவை மாடுகளின் நெற்றியில் கறுப்பு துணி கட்டப்பட்டிருந்தது.

போராட்டத்தில் கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாவட்ட இளைஞர் அணி தலைவர் சந்திரசேகர், சட்ட விழிப்புணர்வு இயக்க தலைவர் செல்வராஜ், சூலூர் நகரசெயலாளர் சுரேஷ், துணைத்தலைவர் முத்துசாமிக்கவுண்டர், கொங்குநாடு முன்னேற்றக்கழக விவசாய அணி செயலாளர் சிவநாதன், ம.தி.மு.க மாவட்ட செயலாளர் ஈஸ்வரன், மாவட்ட துணைசெயலாளர் கருணாநிதி, சூலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆனந்த்குமார், சமத்துவ மக்கள் கட்சி துணை பொதுச்செயலாளர் சண்முகசுந்தரம், மாவட்ட பிரதிநிதி ரவிச்சந்திரன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## சூலூரில் வீடு கட்ட அஸ்திவாரம் தோண்டிய போது பழங்கால தானிய சேமிப்பு கிடங்கு கண்டுபிடிப்பு



அஸ்திவாரம் தோண்டும் போது கண்டுபிடிக்கப் பட்ட பழங்கால தானிய சேமிப்பு கிடங்கை படத்தில் காணலாம்.

*சூலூர், பிப்.12–*

*சூலூரில் வீடு கட்டுவதற்காக அஸ்திவாரம் தோண்டியபோது பழங்கால தானிய சேமிப்பு கிடங்கு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.*

*பூர்வீக வீடு*

*சூலூர் பேரூராட்சி அலுவலகம் அருகே உள்ள பஞ்சாயத்து வீதியைச் சேர்ந்தவர் ஞானம்மாள்(வயது 87). இவரது மகன்கள் சாமிநாதன், கணேசன் (42). ஞானம்மாள் கடந்த 60 ஆண்டுக்கும் மேலாக அந்த வீதியில் உள்ள தங்களது பூர்வீக வீட்டில் வசித்து வருகிறார்.*

*சாமிநாதன் கோவையில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். கணேசன் திருப்பூரில் தங்கி அங்குள்ள ஒரு பனியன் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். தங்களது பூர்வீக வீட்டின் அருகே உள்ள காலி இடத்தில் கடை, வீடுகள் கட்ட முடிவு செய்தனர். இதற்கான பணிகள் கடந்த ஒரு மாத காலமாக நடந்து வருகின்றன. அதன் காரணமாக ஞானம்மாள் கோவையில் உள்ள தனது மகன் வீட்டில் தங்கியுள்ளார். கணேசன் மட்டும் இருந்து கட்டிட பணிகளை கவனித்து வருகிறார்.*

*பாறைக்குழி*

*கடந்த சில நாட்களாக கடைகள் கட்டப்பட்டு வருகின்றன. அருகில் உள்ள சிறிய காலி இடத்தில் வீடு எழுப்புவதற்காக அஸ்திவாரம் தோண்டினார்கள். சுமார் 2½ அடி ஆழம் தோண்டிய போது நிலத்தின் ஒரு பகுதியில் பெரிய கல் இருந்தது, அதை ஊழியர்கள் இடித்து அகற்றினார்கள்.*

*ஆனால் அதன் அடியில் சுமார் 6 அடி ஆழத்தில் 6 அடி அகலத்தில் பெரிய பாறைக்குழி இருந்தது தெரியவந்தது. அரை வட்ட வடிவத்தில் இருந்த அந்த குழி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இது பற்றிய தகவல் கிடைத்ததும் அந்த வீதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் பொது மக்கள் பலர் விரைந்து வந்து ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர்.*

*அகழ்வாராய்ச்சியாளர்கள்*

*இது குறித்து சிலர் கூறுகையில், பழங்காலத்தில் வசித்தவர்கள் தாங்கள் வசித்த பகுதியில் தானியங்களை சேமித்து வைக்க பயன்படுத்தப்படும் தானிய சேமிப்பு கிடங்காக இருக்கலாம் என்று தெரிவித்தனர். எனவே இதுபற்றி பல்லடத்தில் உள்ள அகழ்வாராய்ச்சியாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் வந்து ஆய்வு செய்த பின்னரே அது பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட தானிய சேமிப்பு கிடங்கா? அல்லது உண்மையில் வெறும் பாறைக்குழியா என்பது தெரியவரும்.*

# அமைதியான சூழலில் அழகு மயில்கள்



கோவை மாநகரின் பரபரப்புக்கு இடையே நகரின் மத்தியில் அமைந்துள்ள வனக்கல்லூரி வளாகத்தில் அமைதியான சூழ்நிலையில் மயில்கள் கூட்டம் கூட்டமாக உலாவிவருகின்றன. பார்வையாளர்களின் தொல்லை இல்லாமல் அழகிய மயில்கள் இரைதேடும்பணியில் இயல்பாக ஈடுபட்டிருக்கும் காட்சியை படத்தில் காணலாம்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

### சர்க்கரை

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,880–2,900

### மணிலா பயறு

80 கிலோ கொண்ட மூட்டை
3,300–3,350

### கடலை எண்ணெய்

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
7,450–00

### கடலை புண்ணாக்கு

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,450–00

### தேங்காய் எண்ணெய்

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,810–00

### நல்லெண்ணெய்

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா,புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500–00
டின் (15கிலோ) 1,700–00

### விளக்கெண்ணெய்

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
12,000.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,700–00

### சூரியகாந்தி எண்ணெய்

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,195.00

### ரீபைண்டு ஆயில்

(சுத்திகரிக்கப்பட்டஎண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,310.00

### வனஸ்பதி

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,110.00

### பாமாயில்

10 கிலோ டின் (வரி தனி)
620–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,பிப்.11–
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 19,000 | 190.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,400 | 88.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,700 | 90.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உபருப்பு(வெள்ளை) | ரூ. 6,700 | 70.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,930 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,பிப்.11–
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

| | | |
|---|---|---|
| 1. | வி.797 22எம்.எம் | ரூ. 12,654 |
| 2. | ஜெயதார் 22 எம்.எ | ரூ. ——— |
| 3. | ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) | ரூ. 15,404 |
| 4. | எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் | ரூ. 16,028 |
| 5. | சங்கர் 6 28 எம்.எம். புதியது | ரூ. 16,310 |
| 6. | எம்.சி.யு. 5 32 எம்.எம். | ரூ. 16,310 |
| 7. | டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு | ரூ. 22,496 |

## கோவை உழவர் சந்தை

கோவை,பிப்.11–
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36–00 | புதினா | ரூ. | 16–00 |
| கத்தரிக்காய் | ரூ. | 22–20 | காலிப்பிளவர் | ரூ. | 16–18 |
| வெண்டைக்காய் | ரூ. | 34–36 | பொறியல் தட்டை | ரூ. | 16–18 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 6–7 | பச்சை மொச்சை | ரூ. | 26–00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6–7 | தேங்காய் | ரூ. | 13–14 |
| புடலை | ரூ. | 14–18 | பட்டாணி | ரூ. | 24–70 |
| பீர்க்கான்காய் | ரூ. | 22–23 | பூண்டு | ரூ. | 225–240 |
| சுரைக்காய் | ரூ. | 14–00 | கறிவேப்பிலை | ரூ. | 54–00 |
| பாகற்காய் | ரூ. | 12–14 | அகத்தி | ரூ. | 14–00 |
| கொத்தவரை | ரூ. | 22–00 | வாழைக்காய் | ரூ. | 16–00 |
| பூசணிக்காய் | ரூ. | 17–00 | திராட்சை | ரூ. | 30–54 |
| அரசாணிக்காய் | ரூ. | 10–11 | குடைமிளகாய் | ரூ. | 28–00 |
| மேரக்காய் | ரூ. | 16–00 | சாதா பீன்ஸ் | ரூ. | 24–00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 32–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20–00 | கறிபீன்ஸ் | ரூ. | 22–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 36–00 | புஸ்பீன்ஸ் | ரூ. | 28–00 |
| பெரியவெங்காயம் | ரூ. | 15–00 | காளான் | ரூ. | 80–140 |
| இஞ்சி | ரூ. | 32–55 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10–13 |
| முருங்கைக்காய் | ரூ. | 100–90 | சப்போட்டா1கிலோ | ரூ. | 15–16 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 26–00 | கொய்யா1கிலோ | ரூ. | 22–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 18–20 | மாதுளை1கிலோ | ரூ. | 170–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15–16 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | வரமிளகாய் | ரூ. | 80–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | ஆப்பிள் | ரூ. | 110–00 |
| சக்கரவள்ளி கிழங்கு | ரூ. | 13–00 | சாத்துக்குடி | ரூ. | 28–00 |
| முள்ளங்கி | ரூ. | 11–12 | நெல்லிக்காய் | ரூ. | 20–10 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 32–34 | ஆரஞ்சு | ரூ. | 38–00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 22–00 | வெள்ளரி | ரூ. | 12–32 |
| நூல்கோல் | ரூ. | 20–00 | புளி 1 கிலோ | ரூ. | 70–00 |
| கொத்தமல்லி | ரூ. | 20–00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30–00 |
| டர்னிப்ஸ் | ரூ. | 20–00 | அவரை | ரூ. | 20–24 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 | மக்காச்சோளம் | ரூ. | 12–18 |
| சுலர்கோஸ் | ரூ. | 25–00 | துவரை | ரூ. | 20–00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.20900 |
| மிளகு (சேட்டன்) | ரூ.21300 |
| மிளகு (வயநாடன்) | ரூ.21800 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 7000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 8500 |
| சுக்கு(புதியது) | ரூ.16000 |
| சுக்கு(பழையது) | ரூ.7500 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1200 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1000 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10300 |
| கொப்பரை நாடன் | ரூ.6975 |
| கொப்பரை ராசு | ரூ.7125 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6825 |
| கொப்பரை ராஜ்பூ | ரூ.6625 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7625 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 23400 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 21700 |
| ரப்பர் பால் | ரூ. 17000 |
| காப்பி | ரூ. 9300 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 2850 |
| நேந்திரகாய் | ரூ. 1350 |
| இஞ்சி | ரூ. 1350 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,பிப்.11–
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 85.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1160 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1220 | 76.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | 72.00 |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 74.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,420 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1530 | 100.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,730 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 63.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,250 | 80.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,275 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,025 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,080 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | – |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:–

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.500.00 | ரூ. 700.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 3.50 | ரூ. 5.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.15.00 | ரூ.30.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.15.00 | ரூ.20.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.5.00 | ரூ.8.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.20.00 | ரூ.25.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.15.00 | ரூ.20.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.20.00 | ரூ.25.00 |
| மேராக்காய் | ரூ.7.00 | ரூ.8.00 |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.320.00 | அதிகபட்சவிலை | ரூ.405.00 |
| சராசரி விலை | ரூ.269.00 | சராசரி விலை | ரூ.382.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.261.00 | குறைந்தபட்சவிலை | ரூ.200.00 |

பட்டு நூல் ரூ.2,730

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,184.00 | 15,320.00 | 15,360.00 |
| ஒரு கிராம் | 1,898.00 | 1,915.00 | 1,920.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 46395.00 | 48,500.00 | 48,000.00 |
| ஒரு கிராம் | 49.65 | 48.50 | 48.00 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

**பருத்தி (அன்னூர்)**

| | |
|---|---|
| டி.சி.எச் | ரூ.7400–7870 |
| போல்கார்ட் | ரூ.6500–6640 |
| ஆர்.சி.எச் | ரூ.6500–6700 |

**மஞ்சள் (கோவை)**

| | |
|---|---|
| தனிவிரலி | ரூ.12606–12606 |
| தனிகிழங்கு | ரூ.9506–11006 |

**தேங்காய்**

| | |
|---|---|
| அன்னூர் | ரூ.500–700 |
| பொள்ளாச்சி | ரூ.500–900 |
| ஆனைமலை | ரூ500–800 |
| நெகமம் | ரூ.500–600 |

**மக்காச்சோளம்**

| | |
|---|---|
| அன்னூர் | ரூ960–1000 |
| காரமடை | ரூ.940–940 |

**சோளம்**

| | |
|---|---|
| காரமடை (மஞ்சள்) | ரூ.1400–1460 |

**கம்பு**

| | |
|---|---|
| காரமடை | ரூ.900–970 |

**ராகி**

| | |
|---|---|
| காரமடை | ரூ.800–900 |

**நிலக்கடலை**

| | |
|---|---|
| சேவூர் (காய்ந்தது) | ரூ.2600–3470 |